தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, நவம்பர் 24, திங்கட்கிழமை.

கார்த்திகை 9, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்பு மிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.''

ஆக்கமும் கேடும் சொல்கின்ற சொல்லால் வருதலால் ஒருவன் தன்னுடைய சொல்லில் தவறு நேராமல் காத்துக் கொள்ள வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

புயல், வெள்ள நிவாரணத் தொகை.

144—(*வினா எண் 2292)—திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு வழங்கும் புயல், வெள்ள நிவாரணத் தொகையை அரசின் மானியத் தொகையில் கட்டிக் கொடுக்கப் பட்ட ஆதி திராவிடர் வீடுகளுக்கும் கொடுக்க விதிமுறைகளை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

வெள்ளக் கட்டுப்பாடு உயர்மட்டக் கமிட்டி.

145—(*வினா எண் 9998)—திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளுக்கு நிரந்தரத் தீர்வு காண உயர் மட்டக் கமிட்டி (Flood Control Commission) ஒன்றினை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் சென்னை, வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, தஞ்சை கிழக்குக் கடற்கரை பகுதிகள், மற்றும் தமிழ்நாட்டின் பல பகுதிகள் பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. ஆண்டு தோறும் வெள்ளத்தால் உயிரிழப்பும், பொருட் சேதமும் ஏற்படுகிறது. பெரும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி, பாதுகாக்கும் பணிகளுக்கு நிரந்தரத் தீர்வு காண வெள்ள, நிவாரணப் பணிகளை முறையாகச் செய்ய திட்டங்களைத் தீட்டிச் செயல்பட நிரந்தர அமைப்பு ஒன்றை ஏற்படுத்த அரசு எதிர்காலத்திலாவது முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பாதக தணிப்புத் திட்டம் (Anti Disaster Plan) என்ற திட்டத்தின் கீழ் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு மாநில அவசர நிலை மற்றும் நிவாரணப் பணி அமைப்பு ஏற்கனவே இருந்து வருகிறது. மேலும் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு மாநில ஆலோசனைக் குழு ஒன்றும் இயங்கி வருவது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு ஆலோசனைக் குழு உள்ளது. இக் குழுக்கள் அவசர காலங்களில் செயலில் ஈடுபட்டு நிவாரணப் பணிகளை அவ்வப்போது செயல்படுத்தி வருகின்றன. இதைத் தவிர வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளுக்கு நிரந்தரத் தீர்வு காண உயர்மட்டக் குழு இயங்கவில்லை. வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு செய்யப்படுகின்றன. நிரந்தரத் தீர்வை அந்தந்த துறைகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டிலிருந்து அவ்வப்போது செய்து வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இந்த ஆண்டும் கூட வறட்சி தொடங்கியிருக்கிறது. சென்ற ஆண்டு தொடங்கிய வறட்சிப் பணிகள் முற்றுப் பெறாத நிலையில் இந்த ஆண்டும் வறட்சி வரும் என்ற நிலையிலே மக்கள் அச்சத்திலேயிருக்கிறார்கள். இது ஒரு புறமிருக்க திடீரென்று வருகிற வெள்ளத்தால் வரும் வெள்ள நீரை சேமித்து வைத்து, பிற்காலத்தில் அதைப் பயன்படுத்த முறையான நடவடிக்கையை இனியாவது அரசாங்கம் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டது போன்ற தடுப்பு முறை நடவடிக்கைகள் எடுக்க மாண்புமிகு முதலமைச்சர் தலைமையின் கீழ் கொண்ட ஒரு

1986 நவம்பர் 24]

அமைப்பு இருக்கிறது. தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ் ஒரு குழு இயங்கி வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் களின் கீழ் குழு இயங்கி வருகிறது. பட்ஜெட்டில் இதற்காக மத்திய அரசு ஆண்டுக்கு கிட்டத் தட்ட எட்டரை, எட்டே முக் கால் கோடி ஒதுக்கி வர வேண்டுமென்ற முறை இருக்கிறது. அத்தொகையை வறட்சி, வெள்ளம் வராத காலங்களில் அப்படியே சேமித்துக் கொண்டு வருகிறோம். வேறு எந்த வகையிலும் அத்தொகை செலவழிக்கப்படக்கூடாது. எதிர் பாராத வகையில் வறட்சி, வெள்ளம் ஏற்படுகிறபோது சேமித்து வைத்திருக்கிற இந்தப் பணத்தைச் செலவழித்த பிறகுதான் மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமானாலும் உதவி செய்யும். அந்த அளவிலே வறட்சியும், வெள்ளமும் அவ்வப்போது இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகிற சூழ்நிலையிருப்பதால் அதற்காக முன் கூட்டி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை வளர்ச்சித் திட்டங்களின் மூலமாகவும், வேறுபல திட்டங்களின் மூலமாகவும் வகுக்கும்படியாக அந்தந்தத் துறைகள் அறி வுறுத்தப்பட்டிருக்கின்றன.

திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீகார் மாநிலம், பாட்னாவில் இது போன்ற நிரந்தர அமைப்பு இயங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் கடுமையான அளவிலே வறட்சியாலோ அல்லது பெரும் வெள்ளத்தாலோ தமிழகம் பாதித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையிலே, வந்த பிறகு அவசரம் அவசரமாக அள்ளித் தெளித்தாற்போல் செய்வதைவிட வருமுன் காக்கும் அரசாக ஏன் நிரந்தர அமைப்பை உருவாக்க அரசு முன்வரக்கூடாது? இதிலே அரசாங்கத்திற்கு என்ன சங்கடம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பணியைச் செய்கின்ற முழு அதிகாரம் படைத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிர்வாகத்தின் முழு அதிகாரம் படைத்தவர் தலைமைச் செயலர் அவர்கள். மாவட்டத்தில் முழு அதிகாரம் படைத்தவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள். இவர்கள் மூன்று பேரின் தலைமை யின் கீழும் குழுக்கள் இருக்கின்றன. வெள்ளச் சேதங்கள் எங் கெங்கு ஏற்பட்டிருக்கின்றன, தண்ணீர் எங்கெங்கு தேங்குகிறது, அதைத் தடுப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்று சொல்ல லாம். உதாரணமாக அடையாறில் வெள்ளம் வருகிறபோது இரு கரைகளும் உடைபடுவதால், பாதிப்பு ஏற்படுகிறது. அந்தக் கரைகள் உயர்த்தப்பட வேண்டுமென்று, 2 கோடி ரூபாய் அள வுக்குத் திட்டம் வகுக்கப்பட்டு, மத்திய அரசு அதை ஒத்துக் கொண்டு, மாநில அரசு அதை ஏற்றுக்கொண்டு, அதன் கரை களை உயர்த்துவதால் வெள்ளச் சேதம் தடுக்கப்படுமென்று சொல்லும்போது சம்பந்தப்பட்ட துறைகளினால் அந்தத் திட்டங் கள் கொடுக்கப்படுகின்றன ஒரு அமைப்பு தனியாக ஏற்படுவதால்

இவை ஏற்பட்டுவிடாது. ஆங்காங்கு ஏற்படும் வெள்ளச் சேத மானாலும், வறட்சி நிவாரணப் பணியானாலும், அவற்றுக்கு அந்தந்தத் துறை அல்லது மாவட்ட அளவில் அல்லது மாநில அளவில் அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறவர்கள் உடனடியாக கவனிக்கவேண்டிய பணியைப் பற்றி ஆராய வேண்டும். அதற்கு குழுக்கள் இயங்கி வருகின்றன.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சிறு மழை பெய்தால்கூட வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுவிடுகிறது. அதற்குக் காரணம் குளங்களும், ஏரிகளும் ஆக்கிரமிக்கப்படுவதாலும், தூர் எடுக்கப்படாததாலும் என்று நினைக்கிறேன். ஆக்கிரமிப்புக்களைத் தடுக்க அதிகாரம் பெற்றிருக்கிற இலாக்காக்கள் அதைச்செய்து நடவடிக்கை எடுக்க உத்திரவிட்டாலேயே வெள்ளச் சேதத்தை தடுத்துவிடலாமென்று கருதுகிறேன். அதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீர்ப்பாசனத் துறையின் சார்பாக குளங்கள், ஏரிகள், வாய்க்கால்கள் ஆகியவற்றில் தூர் வாருகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. சில சமயங்களில் தண்ணீரைக் கொண்டு வந்து சேர்க்கும் கால்வாய்களையே ஆக்கிரமித்துக் கொண்டு, அவற்றிலேயே வீடுகள் கட்டிக்கொண்டு குளத்திற்கும், ஏரிக்கும் தண்ணீர் வராமல் செய்துவிடுகிறார்கள். மேலும் குளங்கள், ஏரிகள் வறண்டு போகின்ற நேரங்களில் அந்த புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக்கொள்ளும் சூழ்நிலையும் ஏற்படுகிறது. இவற்றைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நீர்ப்பாசனத்திற்கு இல்லாவிட்டாலுங்கூட, அவற்றைச் சுற்றியுள்ள கிணறுகளில் குடி தண்ணீருக்காக நீர் ஊற்றுகள் ஏற்பட வேண்டுமென்றால் ஏரிகள், குளங்களில் தண்ணீர் தேங்கியிருக்க வேண்டும். அந்த அடிப்படையில் திட்டமிட்டு, மாவட்டங்களைப் பொறுத்த வரையில், 'பேஸ்டு ப்ரோக்ராம்' என்ற அடிப்படையில் தூர் வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உசிலம்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றல்.

146—(*வினா எண். 4399) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தேர்வுநிலைப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தேர்வுநிலை பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவது சம்பந்தமாக உசிலம்பட்டி பேரூராட்சி மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில் அம்மன்றம் 11—7—86-ம் தேதிய 77-வது தீர்மானத்தில் தொடர்ந்து பேரூராட்சியாகவே இருக்கட்டும் என தீர்மானித்துள்ளது.